நம்மை ஆள்வது யார்?

கீ. சீ. இராமசாமி



அமுத நிலையம்

நம்மை ஆள்வது யார்?

★

கீ. சீ. இராமசாமி

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை - 18

உரிமை பதிவு
அமுதம்— 110
முதற் பதிப்பு—ஏப்ரல், 1956

விலை ரூ. 0-12-0

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை—18.

முகவுரை

இந்நூல் புதிதாகக் கல்விப் பயின்ற முதியோர்களுக்காக 'எழுதப்பட்டது. 1955-ம் ஆண்டில் மத்திய சர்க்கார் கல்வி இலாகா நடத்திய புத்தகப் போட்டிக்குச் சமர்ப் பிக்கப் பட்டது. கிராம நூல் நிலயங்களில் இருக்கவேண்டிய புத்தகம் என்று கல்வி இலாகா கமிட்டி இந்நூலைச் சிபாரிசு செய்திருக்கிறது. முதியோர்களுக்கு மட்டு மன்றி, பள்ளிக்கூடங்களில் சமூக பாடம் கற்கும் மாணவர்களுக்கும் இது பயன்படும் என்று நம்புகிறேன்.

வாணியம்பாடி
31—3—56

சீ. சீ. இராமசாமி

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறமடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தேயத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

—பாரதியார்

1. குடியாட்சியின் உயர்வு

அரசாங்கம் ஏன் ?

'மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்' என்பது பழமொழி. நாட்டு வளத்துக்கும் நாட்டு மக்கள் நல் வாழ்வுக்கும் ஒரு முக்கிய காரணம் அரசாங்க நீதி. நல்ல அரசாட்சியில் அமைதி நிலவுகிறது; பொருளாதார நிலை உயருகிறது; மக்கள் இன்புறுகிறார்கள்.

அரசு பலவகைப்படும். நாடுகள் தோறும் நூற்றாண்டுகள்தோறும் அரசாட்சி முறை மாறுபட்டு வந்திருக்கிறது. படைப்பலம் மிகுந்த அரசர்கள் முன்னம் ஏகாதிபத்திய ஆட்சி செலுத்தி வந்திருக்கின்றனர். இன்று ஜனநாயக

காலம். மக்கள் தம் உரிமைகளை உணர்ந்திருக்கின்றனர். அதனால் உலகில் பெரும்பாலான நாடுகளில் குடியரசாட்சி நடந்து வருகிறது. மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட இங்கிலாந்து போன்ற நாடுகளிற்கூட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட சட்ட சபைகளும் பொறுப்புள்ள மந்திரி சபைகளும்தான் நாட்டை ஆளுகின்றன.

நாகரிகம் வளர வளர, சர்க்காருடைய கடமைகள் அதிகமாகின்றன. மக்களது உயிரையும் சொத்தையும் காக்கும் அடிப்படைப் பொறுப்பைத் தவிர, இன்னும் பல பொறுப்புகளை இன்றைய உலகில் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. வெளிநாட்டுப் படையெடுப்புகளிலிருந்தும் உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்தும் நாட்டைக் காக்கவேண்டும். வெளி

நாடுகளுடன் அரசியல், பொருளாதார உறவு கொண்டாடவும், உடன்படிக்கைகள் கையெழுத்திடவும், அதன்படி நடக்கவும் வேண்டும். நாட்டு மக்களது சொத்துரிமையைப் பாதுகாக்கவும், அவர்கள் அமைதியான வாழ்க்கையை நடத்தவும் சட்டங்கள் இயற்ற வேண்டும். இயற்றப்பட்ட சட்டங்களைப் பயன்படுத்தவும், நீதியையும் மக்களது ஜீவாதார உரிமைகளையும் நிலை நாட்டவும் நீதிமன்றங்களை ஏற்படுத்தி நடத்தவேண்டும். அதுவன்றி, நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களது திறமைகளை வெளிப்படுத்தவும், அவர்கள் நோயற்ற வாழ்வு வாழவும் தேவையான கல்வி, சுகாதாரம், தொழிலபிவிருத்தி போன்ற விஷயங்களில் திட்டங்களிட்டு அவற்றை நிறைவேற்ற வேண்டும். ரயில்வேக்கள், விமானம், சாலைகள் போன்ற

போக்குவரத்துச் சாதனங்களை அமைத்துத் தரவேண்டும். கிராமங்கள் உயரவும், உணவுப் பற்றுக்குறை தீரவும், விவசாயம் அபிவிருத்தி அடையவும், அணைத்திட்டங்கள், மின்சார உற்பத்தி, ஆலைத்தொழில்கள், கைத்தொழில்கள் இவற்றை நிறுவுவதும்கூட சர்க்கார் இன்று செய்ய வேண்டியிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் தேவையான பணத்தை மக்களிடமிருந்து வரியாகவும் கடனாகவும் வாங்குதல், நாட்டின் நாணயச் செலாவணி, தபால், தந்தி, அரசியல் தேர்தல்கள் இவற்றைக் கவனித்துக்கொள்வது, இவையும் சர்க்கார் பொறுப்பே. சுருங்கச் சொன்னால் நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் அவசியமான எல்லா அலுவல்களையும் மேற் கொள்வது ஒரு நாட்டின் இன்றைய அரசாங்கத்தின் கடமையாகும். இதிலிருந்து நல்ல அர

சாட்சி நாட்டுக்கு எவ்வளவு அவசியம் என்பது எளிதில் புலப்படும்.

குடியாட்சியின் உயர்வு

அரசியல் முறைகளில் உயர்ந்தது குடியாட்சி. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட சர்க்கார் மக்களது நன்மைக்குப் பாடுபடும் அரசியல் முறைதான் ஜன நாயகம் அல்லது குடியாட்சி.

குடியரசு முறை இந்தியாவிற்குப் புதி தல்ல. வேத காலம் தொட்டு இந்தியா வில் குடியரசுகள், மக்கள் ஆணைக்குட் பட்ட அரசர்கள், பொது மக்கள் சங்கங் கள், அறிஞர் குழுக்கள் மூலம் அர சாட்சி நடந்து வந்திருக்கிறது. இன்றும் நாம் காணும் கிராமப் பஞ்சாயத்துகள் குடியரசாட்சியின் உதாரணங்கள்தான். ஒவ்வொரு கிராமமும் தன் விஷயங் களைத் தானே கவனித்துக் கொள்ளவும், ஒவ்வொரு கிராமத்தானுக்கும் பஞ்சா

யத்துத் தேர்தல் மூலமாகவும் பொதுச் சபைகள் மூலமாகவும் தன் அபிப்பிராயத்தை வெளியிடவும் கிராம அலுவல்களைக் கவனிக்கவும் பஞ்சாயத்து முறை வாய்ப்பு அளிக்கிறது.

அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் பொதுமக்களால் நிர்ணயிக்கப் படவேண்டும் என்பதுதான் குடியரசின் முக்கிய நோக்கம். குடியாட்சி வெற்றி பெறுவதற்குச் சில தேவைகள் உள்ளன. நாட்டில் யாவருக்கும் அரசியல் விஷயங்களில் சுதந்திரம் தேவை. வயது வந்த யாருக்கும் ஓட்டுரிமை ; தேர்தலில் நிற்க வாய்ப்பு ; அடிக்கடிப் பொதுத் தேர்தல்கள்; அரசாங்க உத்தியோகத்துக்குச் சம சந்தர்ப்பம் ; பேசவும், எழுதவும், சங்கங்கள் அமைக்கவும் சுதந்திரம்—இவை தான் அரசியல் சுதந்திரத்தில் அடங்கியவை. பயமின்றி அரசாங்கத்தின் செயல்களையும் கடமைகளையும் விவா

திப்பதும், அவை பற்றிய விஷயங்களைப் பத்திரிகைகள் வெளியிடுவதும் பொதுத் தேர்தல்களின் வெற்றிக்கு அடிகோலு கின்றன.

குடியரசில் பொது மக்களுக்கு விட்டுக் கொடுக்கிற மனோபாவமும், பிறருடைய கொள்கைகளுக்கு மதிப்புக் கொடுக்கிற குணமும் மிக அவசியம். ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியல் விஷயங்களை ஆராயும் சக்தியும் வேண் டும். அரசாங்க அலுவல்களில் யாவரும் தயக்கமின்றிப் பங்குகொள்ளவேண்டும். பொது நன்மைகளை உணர்ந்து தன்னல மின்றி நடக்கவேண்டும். இக்குணங் கள் குடிமக்களின் உள்ளத்தில் பண்பட வேண்டுமானல்,எழுத்தறியாதவர்களுக் குக் கல்வி புகட்டவேண்டும். அக்கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இராமல், பயன் படக் கூடியதாகவும் அரசியலின் உட்பொருளையும் தத்தம் கடமைகளையும்

பொது மக்களுக்கு உணர்த்தத் தக்கதாகவும் இருக்கவேண்டும். நாட்டில் கல்வி, கேள்வி, அறிவில்லாது போனல், ஒரு சிலர் மட்டும் கூடிக்கொண்டு அரசாங்கத்தைக் கைப்பற்றி விடுவர். ஆராய்ந்துணர்ந்த மக்களால் தான் அச்சர்க்காரைத் தள்ளி விட்டு, வேறு சர்க்காரை நியமிக்க முடியும்.

குடியாட்சியின் மற்ருெரு அவசியம், தகுதியுள்ள, பொறுப்பு வாய்ந்த தலைவர்கள். பலர் பல தரப்பட்ட துறைகளில் உழைக்கும் இந்நாளில், பொதுமக்களின் கூட்டு விருப்பம் என்ன என்று அறிவது கஷ்டம். பெரும் பாலானவர்க்குத் தங்கள் வாழ்க்கை, குடும்ப அலுவல்கள், கேளிக்கைகள் இவைதான் முக்கியம். அரசியலில் இவர்கள் அவ்வளவு அக்கறை செலுத்துவதில்லை. அவர்களது கடமையை அவர்களுக்கு அறிவுறுத்துவதும், பொது விஷயங்களை எளிய முறை

யில் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை அவ் விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கச் செய்வதும் தலைவர்களுடைய கடமைதான்.

குடியரசாட்சியில் குறைகள் இல்லாமல் போகவில்லை. மக்களுக்குக் கல்வியறிவும் அரசியல் உணர்ச்சியும் இல்லாமல் போனால், குடியாட்சியின் எல்லாப் பயன்களும் நாட்டுக்குக் கிட்டா. வகுப்பு வாதம், கட்சிப் பொறாமைகள் இவற்றால் மக்களுக்குப் பொது விஷயங்களை ஆராய்ந்து உணரும் சக்தி குறைந்து போகலாம். செல்வமில்லாதவர்கள் தேர்தலுக்கு நிற்கமுடியாமல் போகலாம். இக் குறைகள் இருந்தபோதிலும், குடியாட்சியின் நன்மைகளைப்பற்றி ஐயமில்லை.

ஏனெனில், குடியாட்சியில் கொடுங்கோன்மையும் அடக்கு முறையும் இரா. குடிமக்களது விருப்பங்களும் நலங்

களும்தான் சர்க்காரின் குறிக்கோள். குடியாட்சியில் பிரஜைகளது உரிமைகளையும் சர்க்காரது கடமைகளையும் யாவரும் உணர்கிறார்கள். குடிமக்களே சர்க்காரையும் சட்டசபைகளையும் பொதுத் தேர்தல்களில் வாக்களித்து நியமிக்கிறார்கள். நாட்டின் சட்டசபைகளும் அமைச்சர்கள் குழுக்களும் குடிமக்களுக்குப் பொறுப்புள்ளவை. அன்றியும், குடியாட்சியில் மக்களுக்குப் பொருளாதார, அரசியல் விஷயங்களில் சமத்துவம் கிடைக்கிறது. விவாதங்கள், ஆராய்ச்சி, எண்ணத்திலும் பேச்சிலும் சுதந்திரம், இவை தனி மனிதனுடைய அறிவை வளர்த்து அவனது குணத்தைப் பண்படுத்துகின்றன.

குடியாட்சியில் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஓட்டுரிமை உண்டு. சட்ட சபைகள், பஞ்சாயத்து, முனிசிபாலிடி, ஜில்லா போர்டுகளுக்கான தேர்தல்

களில் இவ்வுரிமை பயன்படுகிறது. இம் மாதிரி, தேர்தல்கள் மூலம் அரசாங்கம் நியமிக்கப்படும் முறைக்குப் **பிரதிநிதித்துவக் குடியாட்சி** என்று பெயர். தேர்தலில் வாக்களிப்பது குடியாட்சியில் மக்களது முக்கிய கடமையாகும். தேர்தலுக்கு நிற்பவருடைய தகுதி, திறமை, கொள்கைகள் இவற்றை ஆராய்வதாலும், அரசாங்கத்தின் அலுவல்களிலும் சட்டசபை விவாதங்களிலும் ஊக்கம்கொண்டு நாட்டின் தேவைகளை உணர்வதாலும்தான், வாக்குரிமையின் உண்மைப் பயனை அடைய முடியும். பத்திரிகைகள், புத்தகங்கள், ரேடியோ, மேடைப் பேச்சுகள் இவை நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் சிக்கல்களையும் அவற்றைத் தீர்க்க அவசியமான வழிகளையும் வாக்காளர்களுக்கு உணர்த்துகின்றன. அவற்றை உணர்ந்து, தன்னலமற்ற முறையில்

பொது நலத்தை அனுசரித்து வாக்கிடு கின்ற மக்களுக்குத்தான் நல்ல அரசாங் கம் கிடைக்கும். அன்றியும், ஓட்டுரிமை நன்கு பயன்பட வேண்டும் என்பதால் தான் பொதுத் தேர்தல்களில் 'ரகசிய ஓட்டுமுறை' அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தியாவில் 21 வயது வந்த ஆண், பெண் யாவருக்கும் ஓட்டுரிமை உண்டு. எல்லோருக்கும் அரசியலில் சம உரிமை வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். இந்தியாவின் முப்பத்தாறு கோடி மக்களில் நூற்றுக்குச் சுமார் எண்பது பேருக்குமேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். பெரும்பாலானே ருடைய வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்திருக்கிறது. இந்தச் சூழ் நிலையில் குடியாட்சி முற்றிலும் வெற்றிபெற வேண்டுமானல், யாவருக்கும் இலவசக் கல்வியும், வேலையின்மையிலிருந்து பாதுகாப்பும்,உழைப்புக்கும் வாழ்க்கைக்

கும் தக்க கூலியும், குடிமக்கள் தங்கள் அறிவையும் குணத்தையும் பண்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பமும் கிடைக்கச் செய்வது மிக அவசியமாகிறது.

கட்சி முறை

இன்றைய உலகில் பிரதிநிதித்துவக் குடியாட்சி, அரசியல் கட்சி முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அரசியல் கட்சி என்பது குறிப்பிட்ட குறிக்கோள்களும் கொள்கைகளும் உள்ள சில பிரஜைகளுடைய ஏறக்குறைய கட்டுக்கோப்புள்ள ஒரு தொகுதி. அரசியலில் ஒரு தனிப்பட்ட ஸ்தாபனமாக நின்று அரசாங்கத்தைக் கைப்பற்றுவதுதான் அவர்களது நோக்கம்.

சட்டசபைகளுக்கான தேர்தலில் எந்தக் கட்சிக்கு அதிக இடங்கள் கிடைக்கின்றனவோ அது ஆட்சி செலுத்து

கிறது. சில சமயம் இரண்டு மூன்று கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை மேற்கொள்வதும் உண்டு. ஆட்சி நடத்தும் கட்சியிலிருந்து ராஜ்யத்தின் முதல் மந்திரியும் பிற மந்திரிகளும் நியமிக்கப் படுகிறார்கள்.

கட்சிகள் பல காரணங்களால் அமையலாம். அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் தவிர, மத ஒற்றுமை, மொழி அன்பு, பிரசித்தி பெற்ற ஒரு தலைவருடன் தொடர்பு போன்ற காரணங்களால்கூட அரசியல் கட்சிகள் உருவாகின்றன. உதாரணமாக இந்தியாவில் உள்ள காங்கிரஸ், சோஷலிஸ்ட், பிரஜா கட்சி, ஹிந்து மகாசபை, கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகள் பல வகைப்பட்ட கொள்கைகளுக்காக அமைந்திருக்கின்றன.

கட்சி முறையால் பல நன்மைகள் உண்டு. அரசாங்கம் இனிது நடைபெற

அவசியமான சூழ்நிலையைக் குடியாட்சியில் கட்சிகள் ஆக்குகின்றன. பொது விஷயங்களில் ஒருமுகமான அபிப்பிராயம் உடைய மக்களை அரசியல் கட்சிகள் ஒன்று கூட்டி, பொதுவான சில கொள்கைகளைச் சர்க்கார் குறிக்கோளாகக் கொள்ளுமாறு செய்கின்றன.

தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் பல கொள்கைகள் இருக்கலாம். பலருக்கு அரசியல் அல்லது சமூக விஷயங்களில் கொள்கைகளே இல்லாதிருக்கலாம். சமூகத்தின் நிலைபற்றிய பல விஷயங்களில் முக்கியமானவற்றை மட்டும் அரசியல் கட்சிகள் பொறுக்கி எடுத்து ஆராய்ந்து மக்கள் முன் சமர்ப்பிக்கின்றன. வாக்காளர்களை ஒற்றுமைப் படுத்தி அவர்களுக்கு அரசியல் விஷயங்களைத் தெளிவு படுத்துகின்றன. தேர்தல்கள் வெற்றிகரமாக நடப்பதற்கும், நாட்டின் அரசியலுக்கு உயிரூட்ட

வும் அரசியல் கட்சிகள் உதவுகின்றன. அன்றியும், நாட்டில் இரண்டே பெரிய கட்சிகளிருந்தால், ஒன்று சர்க்கார் கட்சியாகவும் மற்ருென்று எதிர்க்கட்சி யாகவும் இயங்கும். பலம் பொருந்திய எதிர்க்கட்சி இருப்பதால், சர்க்கார் கட்சி நாட்டு அபிவிருத்திக்கு நெடுங் காலத்துக்குத் திட்டங்களிட்டு மிக்க ஊக்கத்துடன் உழைக்கும்.

அதே சமயம், கட்சி முறையில் சில குறைகளும் உண்டு. கட்சிப் பற்றுதலே மிகவும் உயர்ந்தது என்ற எண்ணம் ஏற்பட்டுத் தனிப்பட்ட கொள்கைகளுக்கு இடம் இல்லாமல் போய்விடலாம். அங்கத்தினர்கள் உள்ளூறக் கட்சியின் கொள்கைகளை விரும்பாது போனலும், கட்சியின் ஒற்றுமைக்காகத் தம் சொந்த அபிப்பிராயத்துக்கு எதிராகச் சட்டசபைகளில் வாக்களிக்க வேண்டியிருக்கலாம். உண்மை, நீதி, பகுத்

தறிவு இவற்றிற்கு இடமில்லாமற் போய்த் தந்திரமும் வீண் புகழ்ச்சியும் வெறும் பேச்சுத் திறமையும் சில சமயம் நாட்டை ஆளத் தொடங்கிவிடலாம்.

இருந்தபோதிலும் கட்சியில்லாத குடியரசை இப்போது எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. கட்சிகளில்லாமல் குடியாட்சி நடப்பது கஷ்டம் மட்டுமல்ல; அது நல்லதும் அல்ல. ஏனெனில் குறைகள் இருந்தும்கூட கட்சி முறையால் நன்மைகள் பல உண்டு. கட்சி சார்புள்ள சர்க்கார் நாட்பட்டு நிற்கவும் நெடுங் காலத்துக்குத் திட்டமிட்டு ஆட்சி செலுத்தவும் முடிகிறது. கட்சி முறையால் நிலையான அரசாங்கம் ஏற்படுகிறது.

ஆயினும் கட்சிகள் எண்ணிக்கையில் அதிகமானாலும் நாட்டுக்கு நன்மை வராது. பல கட்சிகள் இருக்குமிடத்தில் கொள்கைகளில் வேறுபாடுகள்

அதிகம் இருப்பதால், ஒன்றுபட்ட எதிர்க் கட்சி இராது; நிலையான சர்க்காரும் ஏற்படாது.

கட்சி முறை நன்கு நடைபெற வேண்டுமாயின் நேர்மையான எண்ண முள்ள, பொது நலம் விரும்பும் தலைவர் கள் கட்சிகளில் உழைக்க வேண்டும். தேர்தல் ஊழல்களும் அரசியல் ஊழல் களும் தடை செய்யப்பட வேண்டும். சட்டசபைகளில் தங்கள் விருப்பப்படி வாக்களிக்க அங்கத்தினர்களுக்கு அதிக வாய்ப்புக்கள் வேண்டும். கட்சி கள் மக்களது விருப்பத்துக்கு எதிராகத் தீவிரமான கொள்கைகளைச் செயலுக் குக் கொண்டுவர முயன்றால் அவற் றைப் பொது ஜனங்கள் எதிர்க்க வேண் டும். இவ் வழிகளால் கட்சி முறையின் குறைகளைப் போக்கலாம்.

ஆகையால் பொது அறிவும் அரசியல் உணர்ச்சியும் பெற்ற மக்களும், பொறுப்

புள்ள தலைவர்களும், உயர்ந்த கொள்கைகளை உடைய கட்சிகளும் குடியாட்சியின் வெற்றிக்கு மிக அவசியம்.

2. இந்தியாவின் அரசியல் அமைப்பு

இந்திய யூனியனின் அமைப்பு

1947-ம் ஆண்டு இந்தியா ஆங்கில ஆட்சியினின்று விடுதலை பெற்ற போது முகம்மதியர் அதிகமாக உள்ள ராஜ்யங்களான சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், மேற்குப் பஞ்சாப், கிழக்கு வங்காளப் பகுதிகள், 'பாகிஸ்தான்' என்ற பெயருடன் இந்தியாவிலிருந்து பிரிந்து சென்றன.

1956-ம் ஆண்டுநவம்பர் மாதம்வரை இந்தியா 30 ராஜ்யங்கள் சேர்ந்த ஒரு சமஷ்டியாக (யூனியன்) இருந்தது. இப்போது அவை 20 ராஜ்யங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. டில்லியில் ஒரு மத்திய அரசாங்கமும் ஒவ்வொரு


இந்தியா
அரசியல் பிரிவுகள்
காஷ்மீர்
ஸ்ரீநகர்
ஜம்மு
மேற்கு பாகிஸ்தான்
சண்டிகர்
லாகூர்
ஹிமாசலப்பிரதேசம்
நேபாளம்
ஜெய்புரி
டில்லி
ராஜஸ்தான்
உத்தரப்பிரதேசம்
கராச்சி
பீஹார்
கி.பா.
திருபுரா
அஸ்ஸாம்
மணிப்பூர்
போபால்
மத்தியபிரதேசம்
கலகத்தா
குஜராத்
டாமன்
பம்பாய்
பம்பாய்
மஹாராஷ்டிரம்
ஒரிஸ்ஸா
வங்காளம்
புவனேஸ்வரம்
வங்காள
விரிகுடா
அரபிக்
கடல்
ஹைதராபாத
கோவா
மைசூர்
ஆந்திரப்பிரதேசம்
சென்னை
புதுச்சேரி
காரைக்கால்
அந்தமான்
கேரளா
சென்னை
மன்னார்
மினிகாய்
திருவனந்தபுரம
இலங்கை
நிகோபார்

ராஜ்யத்திலும் ஒரு ராஜ்ய அரசாங்கமும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ராஜ்யத்திலும் குறிப்பிட்ட சில அதிகாரங்களுடனும் கடமைகளுடனும் ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்துக்கள், நகராண்மைக் கழகங்கள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்கள் செயலாற்றி வருகின்றன. டில்லியில் மத்திய பார்லிமெண்டின் உறுப்பினர்களையும் ராஜ்ய சட்டசபைகளின் அங்கத்தினர்களையும், ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் வகிப்பவர்களையும் தேர்தல்களில் நாட்டு மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் இவர்களது கடமைகளையும் அதிகார எல்லையையும் இந்திய அரசியல் சட்டம் திட்டமாக வரையறுத்திருக்கிறது. நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரங்களை மத்திய சர்க்காரும், மாகாண சுயாட்சிக்கு வேண்டிய அதி

காரங்களை ராஜ்ய சர்க்காரும் பெற்றிருக்கின்றன. உதாரணமாக இந்தியாவின் பாதுகாப்பு, அயல் நாட்டு விவகாரங்கள், அயல் நாட்டு வாணிபம், ரெயில்வேக்கள், கப்பல், விமானப் போக்குவரத்து, நாணயச் செலவாணி போன்ற விஷயங்கள் மத்திய சர்க்காரைச் சேர்ந்தவை. பொது ஒழுங்கு, போலீஸ், நீதிமுறை, சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்றவை ராஜ்ய சர்க்காரின் எல்லைக்குள் உள்ளன. குற்றச் சட்டம், சிவில் நடவடிக்கை முறைகள், உயில்கள், டிரஸ்டுகள், ஒப்பந்தங்கள், தொழிற்சங்கச் சட்டங்கள், விலைவாசிக் கட்டுப்பாடு போன்றவை மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் இரண்டுக்குமே பொதுவானவை. தங்கள் அதிகாரத்தைச் சேர்ந்த விஷயங்களைக் கவனிப்பதும் அவைபற்றிச் சட்டங்கள் இயற்றுவதும் இவ்வரசாங்கங்களின் கடமை

ஆகும்.


இந்திய யூனியனில் அடங்கியுள்ள 20 ராஜ்யங்கள் இப்போது இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவில் உள்ள ராஜ்யங்களில் கவர்னர் களின் தலைமையில் ஆட்சி நடக்கிறது. அஸ்ஸாம், ஆந்திரா, உத்திரப்பிரதேஷ், ஒரிஸ்ஸா, கேரளா, ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், பம்பாய், பீஹார், மதராஸ், மத்தியப் பிரதேஷ், மேற்கு வங்காளம், மைசூர், ராஜஸ்தான், இவை பதினுன் கும் முதற் பிரிவு ராஜ்யங்கள். பம்பாய் தவிர மற்ற ராஜ்யங்கள் மொழிவாரியா கப் பிரிக்கப் பட்டுள்ளன.

மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் இருக் கும் மற்ற ராஜ்யங்கள் டில்லி, ஹிமா சலப் பிரதேஷ், மணிபூர், திரிபுரா, அந்தமான் நிகோபார் தீவுகள், அமிந் திவி லட்சத் தீவுகளும் புதுச்சேரியும் ஆகும்.

பார்லிமெண்டு

மேல் சபை

உ 250க்கு மேற்படாத அங்கத்தினர்கள். பன்னிருவர் ஜனாதிபதியால் நியமனம். பிறர் மாகாண சட்டசபைகளால் தேர்வு......





மக்கள் சபை

மக்களால் நேரிடைத் தேர்வு-500 அங்கத்தினர்கள்....

பண விஷயங்களில் மேலான அதிகாரம்......

மத்திய சர்க்கார்

இந்தியாவின் முதற் குடிமகனும் ஆட்சித் தலைவரும் ஜனாதிபதியாவார். அரசியல் சட்டப்படி ஜனாதிபதியும் இரு சபைகள் அடங்கிய பார்லிமெண்டும் சேர்ந்தது மத்திய சர்க்கார். அச் சபைகளில் கீழ்ச் சபையாகிய மக்கள் சபையில் 500 பிரதிநிதிகளுக்கு மேல் இருக்கலாகாது. மக்கள்சபை அங்கத்தினர்கள் வாக்காளர்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இச் சபை சாதாரணமாக ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கலைக்கப்பட்டு மறுபடி தேர்ந்தெடுக்கப்படுகிறது. பண வரவு, செலவு விஷயங்களில் இச் சபைக்கே மேலான அதிகாரம்.

பார்லிமெண்டின் மேல் சபையாகிய 'ராஜ்ய சபை' 250க்கு மேற்படாத அங்கத்தினர்கள் கொண்டதாக இருக்

கும். இவர்களில் பன்னிருவர் இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூகசேவை இவற்றில் மேம்பட்டவர்களிலிருந்து ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள். பிற அங்கத்தினர்கள் பலராஜ்யங்களிலுமுள்ள கீழ்ச் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

ஆண்டுக்கு இருமுறையாவது பார்லிமெண்டு கூடவேண்டும். சபைகளைக் கூட்டுவதும் ஒத்திவைப்பதும் ஜனாதிபதியின் கடமைகள். இவ் விரண்டு சபைகளும் சேர்ந்து மத்திய சர்க்கார் அதிகாரத்துக்குட்பட்ட சட்டங்களை இயற்றுகின்றன. பார்லிமெண்டு கூடியிராத சமயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஜனாதிபதி அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கிறார். பார்லிமெண்டு மறுபடி கூடும் போது அந்த அவசரச் சட்டங்களை ஏற்றுக்

கொள்ளும், அல்லது நிராகரிக்கும்.

இந்தியக் குடியரசின் தலைவரான ஜனாதிபதியை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுப்பதில்லை. பார்லிமெண்டிலும் ராஜ்ய சட்டசபைகளிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப் படுகிறார். இந்தியாவின் ஜனாதிபதி பதவிக்குத் தேர்தலில் நிற்பவர் 35 வயது நிறைந்த இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மக்கள் சபையின் அங்கத்தினராவதற்கு வேண்டிய தகுதியும் பெற்றிருக்கவேண்டும்.

ஜனாதிபதியுடைய பதவிக் காலம் ஐந் தாண்டுகள். பதவிக் காலம் முடிந்தபின் அவர் மறுபடி தேர்தலுக்கு நிற்கலாம். மத்தியில் அரசியல் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, பார்லிமெண்டு சபைகளால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பதவியிலிருந்து

விலக்கப்படுவார்.

தலைமை நீதி மன்றங்களின் நீதிபதிகள், கவர்னர்கள், அயல் நாட்டுத் தூதர்கள் இவர்களை நியமிப்பது, அயல் நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்வது, பார்லிமெண்டு சபைகளைக் கூட்டுவது, அவை கூட்டப்பட்ட காரணங்களை அவற்றிற்கு எடுத்துரைப்பது, மத்திய சர்க்கார் சட்டங்களை அங்கீகரிப்பது, அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பது, அரசியல் அல்லது யுத்த நெருக்கடிக் காலங்களில் ராஜ்யங்களின் ஆட்சியை மேற்கொள்வது இவை ஜனாதிபதியின் கடமைகளாகும்.


ஜனாதிபதி, உடல் நலக் குறைவு அல்லது வேறு காரணத்தால் தன் அலுவல்களைக் கவனிக்க முடியாத போதும், ஜனாதிபதி பதவியில் காலி ஏற்படும் போதும் அவரது அலுவல்களை உப ஜனாதிபதி கவனிக்கிறார். உப ஜனாதிபதியைப்

பார்லிமெண்டின் இரு சபைகளின் அங்கத்தினர்களும் ஐந்து ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கிருர்கள். உப ஜனதிபதி பார்லிமெண்டின் மேல் சபைக்குத் தலைவரும் ஆவார். ராஜ்ய சபையின் அங்கத்தினராவதற்கு வேண்டிய தகுதியுள்ள 35 வயதான எந்த இந்தியக் குடிமகனும் உப ஜனதிபதி தேர்தலுக்கு நிற்கலாம்.

நாட்டின் தலைவர் ஜனதிபதியே ஆனலும் அவருடைய அதிகாரத்தை மந்திரி சபைதான் நடத்துகிறது. மந்திரி சபை கூட்டாக மக்கள் சபைக்குப் பொறுப்பானது. அமைச்சர்கள் பார்லிமெண்டின் எந்தச் சபையிலாவது அங்கம் வகிக்க வேண்டும்.

ராஜ்ய சர்க்கார்

மத்திய சர்க்கார் ஆட்சிக்குட்பட்ட


ஜனாதிபதி தேர்வு
ஜனாதிபதி
நாட்டின் தலைவர்
பதவிகாலம்-5ஆண்டு
இரண்டும் சேர்ந்து
தேர்ந்தெடுக்கிறார்கள்
மாகாணக் கீழ்ச்சபைகள்
பார்லிமெண்டு கீழ்ச்சபை
உப ஜனாதிபதி
மேலசபை
கீழ்ச்சபை

ராஜ்யங்கள் தவிர, பிற ராஜ்யங்களின் நிர்வாக அதிகாரி கவர்னர். அவருக்கு ஆட்சி முறையில் உதவி செய்ய முதல் அமைச்சரும், பிற அமைச்சர்களும் உள் ளனர். கவர்னர்களை ஐந்தாண்டு காலத் துக்கு ஜனாதிபதி நியமிக்கிறார். மத்திய சர்க்காரில் ஜனாதிபதிக்கு இருக்கிற மாதிரி, ராஜ்யங்களில் கவர்னர்களுக்கு அதிகாரங்கள் உண்டு. ராஜ்ய சட்ட சபைகள் நிறைவேற்றும் சட்டங்களை அங்கீகரிப்பது, அவசரச் சட்டங்களைப் பிறப்பிப்பது, சட்டசபைகளைக் கூட்டு வது, கலைப்பது போன்றவை கவர்ன ருடைய அலுவல்கள்.

ராஜ்ய சட்ட சபைகளில் சிலவற்றில் இரண்டு சபைகள் இருக்கும். சென்னை, பம்பாய், உத்திரப் பிரதேஷ், பஞ்சாப், பீஹார், மைசூர் ராஜ்யங்களில் இரண்டு சபைகள் உள்ளன. பிற ராஜ்யங்களில் ஒரே சபைதான் உள்ளது. அச்சபைக்

குக் கீழ்ச்சபை அல்லது லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி என்று பெயர். இரண்டு சபைகள் இருந்தால் மேல் சபைக்குக் கௌன்சில் என்று பெயர். 25 வயதுள்ள எந்தக் குடிமகனும் அசெம்பிளி (கீழ்ச்சபை) தேர்தலுக்கு நிற்கலாம். பொதுத் தேர்தலில் மக்களால் கீழ்ச்சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறுர்கள். இச்சபையின் காலம் சாதாரணமாக 5 ஆண்டுகள்.

இரட்டைச் சட்டசபைகளில் மேல் சபையான கௌன்ஸிலின் அங்கத்தினர்கள் சிலர் ஜில்லா போர்டு, முனிசிபாலிடி பஞ்சாயத்து இவற்றின் மெம்பர்களாலும், சிலர் பட்டதாரிகளாலும், சிலர் ஆசிரியர்களாலும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இலக்கியம், கலை, விஞ்ஞானம், சமுக ஊழியம் இவற்றில் மேம்பட்ட சிலரைக் கவர்னர் நியமிக்கிறுர். 30 வயது நிறைந்த

இந்தியக் குடிமக்கள் மேல் சபை அங்கத்தினராக முடியும்.

நிலவரி, விற்பனை வரி, சுங்கங்கள், மத்திய சர்க்கார் மானியங்கள் இவை ராஜ்ய சர்க்காருடைய முக்கிய வருமானம். சர்க்காருடைய அலுவல்கள் பல இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டு அதிகாரிகளால் நடத்தப் படுகின்றன.

ஸ்தல ஸ்தாபனங்கள்

கிராமப் பஞ்சாயத்து முறை இந்தியாவுக்கோ தமிழ்நாட்டுக்கோ புதிதல்ல. பண்டைக்காலம் தொட்டே கிராம வாழ்க்கை குடியாட்சியின் அடிப்படையில் அமைந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு கிராமமும் தன் அலுவல்களைத் தானே பஞ்சாயத்துகள் மூலம் பார்த்து வந்திருக்கிறது. ஊர்ப் பெருமக்களுள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கிராம நிர்வாகத்தை நடத்தி வருவதுதான்

பஞ்சாயத்து முறை என்று கூறப்பட்டு வந்தது. அந்தப் பஞ்சாயத்து முறை தான் இன்றைய கிராமப் பஞ்சாயத்து களுக்கு அடிப்படையாகும்.

இந்தியாவில் இன்று ஏழுலட்சம் கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அவற்றில் பல பஞ்சாயத்துகளால் நிர் வகிக்கப்படுகின்றன. சென்னை ராஜ்யத் தில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் ஜனத்தொகைக்குத் தக்கவாறு ஐந்துக் குக் குறையாமலும் பதினைந்துக்கு மேற் படாமலும் அங்கத்தினர்கள் இருப்பார் கள். பஞ்சாயத்தார்களையும் பஞ்சாயத் தின் தலைவரையும் 21 வயது வந்த கிராமமக்களே வாக்களித்துத் தேர்ந் தெடுக்கிறார்கள். பஞ்சாயத்தினர் சாதா ரணமாக மூன்று வருஷ காலம் பதவி வகிப்பர். அவர்கள் தங்களுக்குள்ளி ருந்து ஒருவரை உபதலைவராகத் தேர்ந்து எடுத்துக் கொள்கிறார்கள்.

பஞ்சாயத்தைக் கூட்டுவதும், உப தலைவர் தேர்தலை நடத்துவதும், பஞ் சாயத்துச் சட்டத்தின் கீழ் தான் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்று வதும் தலைவரின் பொறுப்பு. பஞ்சாயத் தார் செய்த முடிவுகளைச் செயலாற்ற ஒரு நிர்வாக அதிகாரி இருப்பார்.

கிராமச் சாலைகள் போடுவது, சாலைக்கு விளக்குகள் போடுவது, சாக்கடைகள் அமைப்பது, தெருக்களை யும் கக்கூசுகளையும் சுத்தம் செய்வது, குடிதண்ணீர் வசதிகள் செய்வது, மயானங்கள் நடத்துவது, தொத்து நோய்கள் பரவாமல் தடுப்பது போன்றவை பஞ்சாயத்தின் முக்கிய கடமைகளாகும். கிராமச் சாலைகளில் மரங்கள் நடுவது, சந்தைகள், அங்காடி கள், வண்டி நிலையங்கள், கட்டிட வேலை கள் இவற்றைப் பரிபாலிப்பது, இறப்பு—பிறப்புகளைப் பதிவு செய்தல், கைத்

தொழிலபிவிருத்தி, ஆரம்பபாடசாலை களையும் மருத்துவ சாலைகளையும் நடத்துவது, சிறு வழக்குகளை விசாரிப்பது போன்ற பலவிஷயங்களில் பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு.

பஞ்சாயத்துகளுடைய முக்கிய வருமானம் நிலவரிகள், வீட்டு வரி, தொழில் வரி, வண்டிகள் மீது வரி, இவைகளால் கிடைக்கிறது. எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்துகள் தவிர, ராஜ்யசர்க்கார் சார்பில் நிலவரியை வசூலிக்கவும் பஞ்சாயத்து இல்லாத கிராமங்களில் சிறு வழக்குகளை விசாரிக்கவும் ஒரு கிராம முன்சீப்பும் அவருக்கு உதவக் கணக்குப் பிள்ளை, தலையாரி, தோட்டி போன்ற ஊழியர் களும் இருக்கிறார்கள்.

20,000க்கு மேற்பட்ட ஜனத் தொகையுள்ள சில நகரங்கள் முனிசி

பாலிடிகளாகப் பதிவு செய்து கொள்கின்றன. அவற்றின் நகராண்மைக் கழக அங்கத்தினர்களையும் (முனிசிபல் கௌன்ஸிலர்களையும்) பொது மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். நகராண்மைக் கழகத்தின் அங்கத்தினர்கள் தம் தலைவரைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

சாலைகள், சாக்கடைகள், சாலை விளக்குகள், தண்ணீர் வசதி, ஆரம்ப, உயர்தர பாடசாலைகள், வைத்திய வசதிகள் இவற்றை அமைக்கும் அதிகாரத்தை நகராண்மைக் கழகங்கள் பெற்றிருக்கின்றன. அக்கழகங்களின் தீர்மானங்களைச் செயலாற்ற, 'கமிஷனர்' என்றொரு நிர்வாக அதிகாரி இருக்கிறார்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர் போன்ற பெரிய பட்டணங்

களின் ஸ்தல ஸ்தாபனங்கள் 'கார்ப்பொரேஷன்' என்று அழைக்கப்படுகின்றன. கார்ப்பொரேஷன் மெம்பர்களும் பொது ஜன வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அவர்கள் 'மேயர்' என அழைக்கப்படும் தங்கள் தலைவரைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

சாலை அமைப்பு, கல்வி போன்ற சில அலுவல்களில் ஒரு பாகத்தை ராஜ்ய சர்க்கார் ஜில்லா போர்டுகளுக்கு அளிக்கின்றனர். ஜில்லாக்கள் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியின் மக்களும் தங்கள் தொகுதியின் அங்கத்தினர்களை ஜில்லா போர்டு தேர்தலில் தேர்ந்தெடுக்கிறார்கள்.

3. குடிமக்களது உரிமைகளும் கடமைகளும்

குடிமக்களது உரிமைகள்

இந்தியர்களுடைய சுதந்திரக்கனவு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று பலித்தது. முடியாட்சி போய்க் குடியாட்சி வந்தது. நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களானோம். விடுதலை பெற்ற நாட்டின் அரசாட்சி முறையை வகுக்கும் பெருஞ்செயலை டில்லியில் இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை நடத்தியது. அச்சபையினுடைய முயற்சியின் பலன் தான் இந்தியாவின் அரசியல் சட்டம். 1949 நவம்பரில் நிறைவேற்றப் பட்ட அரசியல் சட்டம் 1950 ஜனவரி 26 அன்று செயலுக்கு

வந்தது. அன்று முதல் இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசு.

இந்திய அரசாங்க முறையில் இந்த அரசியல் சட்டந்தான் நாட்டின் அடிப் படைச் சட்டம். இச்சட்டம் மத்திய சர்க் கார், மாகாண சர்க்கார் இவர்களுடைய அதிகாரங்களேயும்கடமைகளேயும் குறிப் பிடுகிறது. அவர்களது கொள்கை களுக்கு வழிகாட்டியாகச் சில சித்தாந் தங்களேக் கூறுகிறது. நீதி மன்றங்கள், சர்க்கார், சட்டசபைகள் இவற்றின் அமைப்பையும் நடைமுறையையும் விவ ரிக்கிறது. 21 வயது வந்த ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் இச் சட்டம் ஓட்டுரிமையை அளிக்கிறது. சர்க்கா ருக்கு ஆளும் சக்தியையும் அதை நிறு வும் குடிமக்களுக்கு ஜீவாதார உரிமைக ளேயும்கொடுப்பது இச்சட்டம்தான்.இவ் வுரிமைகள் அடக்குமுறை ஆட்சியிலி ருந்து குடிமக்களேக் காப்பாற்றுகின்றன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் போராடி, அடக்குமுறைச் சட்டங்களின் தீவினைகளை உணர்ந்த சுதந்திர வீரர்கள் அடங்கிய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் இதை நன்கு உணர்ந்திருந்தனர் என்பது இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையிலிருந்தே விளங்கும்.

'இந்தியாவின் மக்களாகிய நாம் இந்தியாவை ஒரு முழுச் சுதந்திரமுள்ள ஜனநாயகக் குடியரசாக அமைத்து, இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும், சமூக, பொருளாதார, அரசியல் விஷயங்களின் நியாயமும், எண்ணம், பேச்சு, நம்பிக்கை, மதம், வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும் வாழ்க்கை நிலையிலும் வாழ்க்கையின் வாய்ப்புகளிலும் சமத்துவமும் யாவருக்கும் கிடைக்கவும், தனி மனிதனுடைய கௌரவத்தையும் நாட்டின் ஒற்றுமை

யையும் உறுதிப் படுத்துவதற்கான சகோதரத்துவத்தை வளர்க்கவும் மனப் பூர்வமாக முடிவு செய்து 1949 நவம்பர் 26ஆம் நாளாகிய இன்று இந்த அரசியல் அமைப்பை ஒப்புக்கொண்டு, சட்டமாக்கி, நமக்கு அளித்துக் கொள் கிரேம்' என்று இந்திய அரசியல் சட்டம் தொடங்குகிறது.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு. இந்தியாவின் குடிமகனுக இருக்க ஜாதி, மதம், கொள்கை பற்றிய கட்டுப் பாடு கள் கிடையா. சட்டத்தின் முன் யாவரும் சமம், ஆணுயினும் சரி; பெண்ணுயினும் சரி; எந்த ஜாதியாயினும் சரி.

மதம், இனம், ஜாதி, பால், பிறப்பிடம் காரணத்தால் மட்டும் எந்தப் பிரஜையைப் பொறுத்தும் அரசாங்கம் வேற்றுமை செய்தல் ஆகாது. கடை வீதிகள், பொதுச் சாலைகள், கிணறுகள் போன்ற பொது இடங்களை யாவரும்

உபயோகிக்கலாம். தீண்டாதவன் என்று ஒருவனிடம் வித்தியாசம் காட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அரசாங்க வேலைகளிலும் உத்தியோகங்களிலும் எல்லாப் பிரஜைகளுக்கும் சமவசதி உண்டு. ஆனால் முன்னேற்றமடையாத சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கம் சலுகை காட்டலாம்.

அவதூருகவோ, பொது ஒழுங்குக்கு முரணாகவோ, ஆபாசமாகவோ அல்லது அரசாங்க அமைதிக்குக் கேடு விளைவிக்கும்படியாகவோ இல்லாதவரையில் எல்லாக் குடிமக்களுக்கும், தம் பொது அபிப்பிராயத்தை வெளியிடவும், பேசவும் சுதந்திரம் உண்டு. அமைதியுடன் கூட்டம் போடவும், சங்கங்கள் நிறுவவும், ஓரிடத்தினின்று மற்ருேரிடத்துக்குப் போகவும் குடிமக்களுக்கு உரிமை உண்டு. இந்தியக் குடிமகன்

நாட்டின் எந்தப் பாகத்திலும் வசிக்கலாம். தகுதியிருப்பின் எந்தத் தொழிலையும் மேற் கொள்ளலாம். தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும் சொத்துக்களை ஆளவும் விற்கவும் வாங்கவும் அவனுக்கு உரிமை உண்டு. சட்டத்தின் அதிகாரம் இல்லாமல் எவர் சொத்தும் பறிமுதல் செய்யப்படாது. பொதுக் காரியங்களுக்காக எந்தச் சொத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டாலும் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். நஷ்ட ஈட்டைச் சட்டசபைகளே நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சமீபத்தில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது.

சட்டத்துக்கு மீறிய தண்டனைகள், ஒரு குற்றத்துக்கு ஒருமுறைக்கு மேல் ஒருவர்மீது நடவடிக்கை எடுப்பது, அடிமை வியாபாரம், கட்டாயவேலை, பதினன்கு வயதாகாத குழந்தைகளிடம்

தொழிற்சாலைகளில் வேலை வாங்குவது இவற்றை அரசியல்சட்டம் தடை செய்கிறது. நாட்டின் அமைதி, தேசத்தின் பாதுகாப்பு பொதுமக்களின் நல்லொழுக்கம் இவற்றை நிலைநாட்டத் தேவையான கட்டுத் திட்டங்களைத் தவிர ஒரு இந்தியனுடைய வாழ்க்கையில் அவனுக்குப் பூரண சுதந்திரம் உண்டு; இவ்வுரிமைகள் பறிக்கப் படாதிருக்க நீதிமன்றங்களின் உதவியை அவனால் நாட முடியும். நீதிமன்றங்களின் பாதுகாப்பு எவருக்கும் மறுக்கப்படாது.

மக்களுக்கு நீதி வழங்கவும் அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்தியாவில் உள்ள நீதி மன்றங்களில் தலைமையானது இந்தியாவின் சுப்ரீம் கோர்ட். ஒவ்வொரு ராஜ்யத்திலும் தலைமை நீதி மன்றங்களும் ஜில்லாக் கோர்டுகளும் பிற நீதி மன்றங்களும் உள்ளன.

இவ் வடிப்படை உரிமைகள் பறி போகாதிருக்க, அரசியல் சட்டத்தை எளிதில் மாற்றி அமைத்து விட முடியாதவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் காலத்துக்குத் தகுந்தபடி அரசியலும் மாறவேண்டிய அளவுக்கு அரசியல் திருத்தங்கள் செய்வது மிகவும் கடினமாக இல்லாதவாறும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

குடிமக்கள் கடமைகள்

சுயாட்சியில் மக்களுக்கு உரிமைகளுமுண்டு, கடமைகளும் உண்டு. 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்கிறது புறநானூறு. மக்களுக்குத் தக்கவாறு தான் அரசாங்கம் அமைகிறது. ஒவ்வொரு குடிமகனும் தன் கடமைகளை உணர்ந்து நடக்கவேண்டும். ஒவ்வொரு பிரஜையும்

சர்க்கார் செலவுக்குத் தேவையான பணத்துக்குத் தான் கட்ட வேண்டிய வரிகளைத் தவருது கட்ட வேண்டும். சட்டசபைகள் இயற்றிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். நாட்டு அமைதிக்கு அபாயம் நேரும் போது நாட்டின் பாதுகாப்புக்குப் பாடு பட வேண்டும். நீதி மன்றங்களில் ஜூரிகளாகவோ, சாட்சிகளாகவோ அழைக்கப்படும்போது சென்று தம் கடமைகளைச் சீருடன் ஆற்ற வேண்டும்.

தவிர, ஜனநாயகம் வெற்றியுடன் நடக்க, தன்னிடமுள்ள ஓட்டுரிமையின் மகிமையை உணர்ந்து அதைப் பயன் படுத்த வேண்டும். சமூக விஷயங்களை ஆராய்ந்தறிந்து, பொது நன்மைக்காக வாக்களிக்க வேண்டும். கூடுமான வரை நாட்டின் பொது நன்மைக்காகப் பாடு பட வேண்டும். அப்போது தான் நாடு உயரும்.

நம்மை ஆள்வது யார்?

★

நம் இந்திய தேசம் 26-1-'50 முதல் ஜனநாயகக் குடியரசு நாடு. இங்கு வயது வந்த ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை உண்டு. ஆகையால் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நம் குடியரசுச் சட்டத்தைப்பற்றி நன்ருகத் தெரிந்துகொள்ள்' வேண்டி இருக்கிறது.

சட்ட நுணுக்கங்களை நீக்கி, எல்லாரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில், **'நம்மை ஆள்வது யார்?'** என்பதை ஆசிரியர் தெளிவாக விளக்கி இருக்கிருர்.

ஜன நாயகம் என்ருல் என்ன? அரசியல் கட்சிகள் ஏன் இருக்கவேண்டும்? நாட்டிற்குத் தலைவர்கள் ஏன் வேண்டும்? பஞ்சாயத்து, ஜில்லா போர்டு, ராஜ்ய சபைகள், மத்திய சபைகள் எல்லாம் எப்படி அமைக்கப்படுகின்றன? இவைகளுக்கு எல்லாம் ஓட்டுப் போடும் மக்கள் எப்படி நடுநாயகமாக விளங்குகிருர்கள்? இவைகளை, புதிதாக எழுதப் படிக்கக் கற்றுக்கொண்ட நம் நாட்டு மக்களுக்கும் பாடசாலைச் சிறுவர்களுக்கும் இந்த நூல் நன்ருக விளக்கக் கூடியது.

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்

தேனும்பேட்டை : : சென்னை-18